# இப்போதும் ரோபோவாக இருக்கப் போவதில்லை!

கணையாழி தலையங்கம்

செயற்கை நுண்ணறிவில்
மனித குலத்தை ரோபோ ஆக்க
வந்துகொண்டு இருக்கின்றன
புதுப் புது ரோபோக்கள்!

காலம் காலமாகக்
கடவுள், சாதி, மதம், சமுதாயம்
எல்லாமே
மனிதர்களை ரோபோ ஆக்க
மனித குலம் கட்டமைத்த
ரோபோக்கள் தாமோ?

அவனின்றி ஓர் அணுவும் அசையாது!
அப்படியெனில்
நம்மை இயக்குவது எது?

சொர்க்கத்துக்குப் போக
ஆசைப்பட்டுக்
கும்பமேளாக் குளியலில்
உயிர் விடும் மக்களை
உசுப்பிவிடும் ரோபோ எது?

பாவம் செய்யாதிருக்க
வழி தேடுவதை விட்டுவிட்டுப்
பாவத்தைக் கரைக்க
நதியும் நாளும் வேண்டி
ஓடிக்கொண்டிருக்கும்
உயிர் ரோபோக்களை
என்ன சொல்ல?

யோசித்துப் பார்த்தால்
யார் ரோபோ?
நாம் ரோபோவை இயக்குகிறோமா?
அல்லது
நம்மை ரோபோ இயக்குகிறதா?

அடுத்தவரையோ அடுத்த நாட்டையோ
ரோபா ஆக்க
ஆசைப்படுகிற உலகில்
ஒவ்வொருவரும் நான்
ரோபோ இல்லை என்பதைக் காட்ட
சிந்திக்க வேண்டியிருக்கிறது.

குடும்பம், சமுதாயம் என
நாமும் கூட பல நேரங்களில்
ரோபோ தான்!

விழுமியம் கொண்ட சமுதாயத்திற்கு
மக்கள்
ரோபோவாக இருக்கலாம்!

நல்ல தலைமைக்கு
மாற்றப்பட வேண்டிய
சமுதாயம் கூட
ரோபோவாக இருக்கலாம்!

ஆனாலும்
நாம் ரோபோவா?
அல்லது
நம்மை இயக்குவது ரோபோவா?
தெரிந்து கொண்டு இயங்கத்
தெளிவு வேண்டும்!

பறவை, விலங்குகளைப் போலக்
கிடைத்ததை உண்டு
மரத்திலும் குகையிலும்
அச்சத்தில் கிடந்த
ஆதி மனிதர்களின் உதவிக்குக்
கல்லும் மரமும் நெருப்பும் நீரும்
கைக்குக் கிடைத்த போது
விலங்கும் பறவைகளும் கூட
அவர்களுக்கு
ரோபோ ஆகியிருக்கலாம்!

மண்ணைப் பிசைந்து
பானை சுட்ட போது
இரும்பைக் கண்டறிந்த
"கலம் செய் கோ" வுக்குச்
சக்கரம் ரோபோ ஆகியிருக்கலாம்!

இரும்பு கைவசப்பட்ட போது
இவன் பயந்து பயந்து
ஓடிய விலங்குகள்
இவனுக்குப் பயந்த
ரோபோ ஆகியிருக்கலாம்!

மேலும் மேலும்
புதுப் புது ரோபோக்களை
இறக்குமதி செய்து
மனிதர்களை ரோபோவாக
மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்!

ஆனாலும்
மனித குலம் முழுவதையும்
ரோபோ ஆக்க
இதுவரை வரவில்லை
எந்த ரோபோவும்!

இயக்குவதைக் காட்டாமல்
இயங்கிக் கொண்டிருக்கும்
ரோபோக்கள் சில
சிந்திக்கச் சொன்ன பெரியாரையும்
வம்புக்கு இழுக்கின்றன!

சாதி, மதம், கடவுள் என்று
மனித குலத்தை ரோபோ ஆக
மாற்றிக் கொண்டிருந்த
ரோபோக்களையே
மாற்ற முயன்றவர்கள்
நாங்கள் ரோபோ இல்லை என்பதை
நாட்டுக்கு உணர்த்தினார்கள்.

சமுதாய ரோபோவாக
இருந்து கொண்டே
திருவள்ளுவரைப் போலப்
பெரியாரைப் போல
அதையும்
எதிர்க்கவும் மாற்றவும் இயக்கவும்
மனித குலத்திற்கு
வாய்ப்பு இருப்பதைக்
காட்டி இருக்கிறார்கள்!

அதிகார அமைப்புகள்
மக்களை ரோபோவாக
மாற்ற நினைக்கிற போது எல்லாம்
நாங்கள் உங்களுக்கு
ரோபோ இல்லை என்று
எதிர்க்கின்ற போக்கினைக்
கொண்டாட வேண்டும்!

அப்படித்தான்
நான்
முதலமைச்சராக இருக்கின்றவரை
நடக்காது என்று
டங்க்ஸ்டன் கனிம ஏலத்தை
ரத்து செய்ய வைத்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!

அவர்தான்
காலங்கள் மாறினாலும்
இப்போதும் நாம்
இரும்பின் பயன்பாட்டை
பண்பாடாகக் கொண்டிருப்பது போல
இரும்புக்கால ஆய்வில்
தமிழர்களின் பொற்கால வாழ்க்கையை
உலகுக்கு அறிவித்து.
உணர்த்தியிருக்கிறார்
"இப்போதும் ரோபோவாக
இருக்கப் போவதில்லை!"



ம.ரா.

–நன்றி
கணையாழி!
பிப்ரவரி
– 2025

130-வது பிறந்த நாள்:

# தேவதாசி முறையை ஒழித்த பெருமை ஓமந்தூராரையே சாரும்!

## சிலைக்கு மாலை அணிவித்து அமைச்சர் க.பொன்முடி புகழாரம்!

விழுப்புரம், பிப். 3 -

தமிழகத்தில் தேவதாசி முறையை ஒழித்த பெருமை முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூராரையே சாரும் என வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஓமந்தூரார் அவர்களின் 130 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது மணி மண்டபத்தில் அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி புகழாரம் சூட்டினார்.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூரார் அவர்களின் 130வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திண்டிவனம் அடுத்த ஓமந்தூரில் உள்ள அவரது மணி மண்டபத்தில் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி ஓமந்தூரார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி கூறியதாவது :-

மணிமண்டபம் அமைத்தது தி.மு.க. ஆட்சி காலத்தில் தான். அப்போது முதலமைச்சராக இருந்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கினார். அப்போது அமைச்சராக இருந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திண்டிவனம் வருகை புரிந்து மணி மண்டபம் கட்டுவதற்கான இடத்தை தேர்வு செய்து முன்னின்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஓமந்தூரார் பிறந்தநாள் விழா மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் முதல் முதலமைச்சராக பதவி ஏற்ற ஓமந்தூரார் அவர்கள் தேவதாசி முறையை ஒழித்ததும், அனைவரும் கோவிலுக்குள் நுழைய அதிகாரம் வழங்கியதும், ஜமீன்தார் முறையை ஒழித்ததும், வடலூரில் சுத்த சன்மார்க்க மையம் அமைத்த பெருமையும் ஓமந்தூராரையே சாரும்.

அவர் சார்ந்த சமுதாயத்திற்கு மட்டுமல்ல தமிழகத்தில் உள்ள அனைத்து சமுதாய மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு சட்டங்களை இயற்றிய பெருமை ஓமந்தூராரையே சாரும் என பெருமையுடன் தெரிவித்தார்.

திண்டிவனம் சார் ஆட்சியர், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் ப. சேகர், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, வடக்கு மாவட்ட பொருளாளர் ரமணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாசிலாமணி, முன்னாள் நகர செயலாளர் கபிலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனி ராஜ், இளைஞர் அணி அமைப்பாளர் கண்ணன் ஆனந்த், துணை அமைப்பாளர் டி. கே.பி.ரமேஷ், எம்.டி.பாபு, அண்ணாமலை உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

ஒன்றிய அரசின் பட்ஜெட் அறிக்கை!

# பீகாருக்கு வளர்ச்சிக்கான நிதியும் தமிழ்நாட்டிற்கு திருக்குறளும் கொடுத்த பட்ஜெட்!

## கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிப் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!

சென்னை, பிப்.3-

ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை பீகாருக்கு வளர்ச்சிக்கான நிதியும் தமிழகத்திற்கு திருக்குறளும் கொடுத்த பட்ஜெட் என கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

மூன்றாவது முறை பா.ஜ.க. ஆட்சி அமைத்த பிறகு தாக்கல் செய்யப்படுகிற முழு நிதிநிலை அறிக்கை. சிறு குறு தொழில்களையும், விவசாயத்தையும் காப்பாற்றும் என்ற எண்ணத்தில் மண்ணை போட்ட நிதிநிலை அறிக்கையாக ஒன்றிய நிதி அமைச்சர் தாக்கல் செய்திருக்கிறார்.

தனிநபர் வருமான வரி உச்சவரம்பு உயர்த்தப்பட்டது என்ற முகத்திரையின் பின்னால் பட்ஜெட்டின் வளர்ச்சிக்கு உதவாத அறிவிப்புகள் மறைந்திருக்கின்றன. வருடம் 12 லட்சம் சம்பளம் வாங்கும்தனிநபருக்கு சலுகை என்ற விதத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மிக குறைந்த அளவே இந்த அளவிற்கு சம்பளம் வாங்குபவர்கள் நாட்டில் இருப்பார்கள்.



வருடம் 12 லட்சம் சம்பளம் வாங்கும் தனி நபர்களுக்கு சலுகை என்ற அறிவிப்பை அந்தப் பயனாளிகள் சார்பாக வரவேற்கின்றேன். விவசாய உற்பத்தி பொருட்களும் குறைந்தபட்ச விலையில் கிடைக்குமென்று எதிர்பார்த்த விவசாயிகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். நீர்பாசன திட்டங்களுக்காக குறிப்பாக நதிநீர் இணைப்பிற்காக அறிவிப்பு இல்லாததும் ஏமாற்றம் அளிக்கிறது.

தொடர்ந்து விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்படுமென்ற அறிவிப்பு இருக்கும் பொழுது கடனை திருப்பி கட்டுவதற்காக லாபம் ஈட்டும் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. சில லட்சங்கள் வருட வருமானம் ஈட்டுகின்ற தொழிற்சாலைகளும் வருடத்திற்கு 500 கோடி ரூபாய் வருமானம் ஈட்டுகின்ற தொழிற்சாலைகளும் ஒரே கோட்டில் வைக்கப்பட்டு பார்க்கப்பட்டிருப்பது வளர்ச்சிக்கு உகந்ததல்ல.

வருடத்திற்கு சில லட்சங்கள் முதல் ஐந்து கோடி வரை வருட வருமானம் ஈட்டுகின்ற தொழிற்சாலைகள் சிறு தொழில்கள் என்று வகைப்படுத்தப்பட்டு தனி சலுகைகள் அறிவிக்கப்படுமென்ற எதிர்பார்ப்பும் பொய்த்துப் போனது.

நஷ்டத்தில் இருக்கின்ற தொழில்களை காப்பாற்றுவதற்கு எந்த அறிவிப்பும் இல்லாதது வருத்தமளிக்கிறது. உலக சூழ்நிலைகளின் காரணமாக லாபம் குறைவாக ஈட்டுகின்ற தொழில்களுக்கு வட்டி சலுகை அளிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பும் ஏமாற்றப்பட்டுவிட்டது. கேன்சர் மையங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு நாட்டின் சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அந்த கேன்சரை உருவாக்குகின்ற தொழிற்சாலை மற்றும் நகரப் பகுதி கழிவுகள் கலக்கின்ற நீர்நிலைகளை மேம்படுத்த அறிவிப்புகள் இல்லை. கேன்சர் வராமல் தடுப்பதற்கான முயற்சிகளும் இல்லை. நாட்டின் வளர்ச்சிக்கு உகந்த நிதிநிலை அறிக்கையாக இந்த நிதிநிலை அறிக்கை இல்லை.

இவ்வாறு ஈ.ஆர்.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த

# நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாவட்டக் கழகத்தினருக்கு எஸ்.எம்.மதுராசெந்தில் வேண்டுகோள்!

நாமக்கல், பிப். 3 -

நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை வருமாறு:"-

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை, சுயமரியாதை திருமணம், சென்னை மாகாணத்தை தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்த தாய்க்கு பெயர் தந்த தனிப் பெரும் தனயன் அறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவை போற்றும் வகையில் நாளை (பிப்ரவரி 3) காலை 8.00 மணியளவில் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு மா. மதிவேந்தன், மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் ஆகியோர் தலைமையில் திருச்செங்கோடு நகர கழக செயலாளர் டி.கார்த்திகேயன், ஒன்றிய கழக செயலாளர்கள் ஜி.தங்கவேல், கே.செல்வராசு, கு.பழனிவேல், பேரூர் கழக செயலாளர் மு.திருமலை, நகர்மன்ற தலைவர் திருமதி. எஸ்.நளினி சுரேஷ் பாபு ஆகியோர் முன்னிலையில் அண்ணா சாலை முதல் நகராட்சி அலுவலகம் வரை அமைதி ஊர்வலமாக சென்று நகராட்சி வளாகத்தில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

அதேபோல், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியில் குமார பாளையம் வடக்கு, தெற்கு நகர கழக செயலாளர்கள் டி.விஜய கண்ணன், எஸ். ஞானசேகரன் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர்கள் என்.நாச்சிமுத்து, ஆர்.செல்வம், ஆ.இளங்கோவன், பேரூ கழக செயலாளர்கள் எஸ்.பி.கார்த்திராஜ், எஸ்.ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலையில், குமாரபாளையம் தொகுதி அலுவலகம் முதல் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வரையிலும்,



பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதியில் வேலூர் பேரூரில் பரமத்தி ஒன்றிய கழக செயலாளர் பி.பி.தனராசு,வேலூர் பேரூர் கழக செயலாளர் பி.முருகன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.தங்கவேல், கே.கே.சண்முகம், ஏ.பி.ஆர்.சண்முகம், பேரூர் கழக செயலாளர்கள் மு. ரமேஷ்பாபு, ஆர்.கருணாநிதி, பி.முருகவேல், எம். ராமலிங்கம் மற்றும் வேலூர் பேரூராட்சி தலைவர் திருமதி.எம்.லட்சுமி, ஆகியோர் முன்னிலையில்

வேலூர் - நாமக்கல் நான்கு சாலை முதல் அண்ணா சிலை வரையிலும் அமைதி ஊர்வலமாகச் சென்று அங்குள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்படும். இந்த அமைதிப் பேரணியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள அரசு வட்டார பொது சுகாதார நிலையத்தினை நேற்று (01.02.2025) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு.பொற்கொடி உட்பட பலர் உள்ளனர்.

கடலூர் மாவட்டம் - நல்லூர் ஊராட்சியில் ரூ.50 லட்சத்தில்

# அரசு வட்டார பொது சுகாதார நிலையம் - திட்டக்குடியில் கல்லூரி மாணவியர் விடுதி!

## அமைச்சர் சி.வெ.கணேசன் திறந்து வைத்தார்!

கடலூர், பிப்.3-

கடலூர் மாவட்டம் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அரசு வட்டார பொது சுகாதார நிலையம் மற்றும் அரசு கல்லூரி மாணவியர் விடுதியினை திறந்து வைத்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு வட்டார பொது சுகாதார நிலையத்தினை நேற்று (01.02.2025) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு தாய்சேய் நலப்பெட்டகங்களை வழங்கினார்.

தொடர்ந்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், முன்னிலையில் கடலூர் மாவட்டம், திட்டக்குடி பகுதியில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரசு கல்லூரி மாணவியர் விடுதியினை திறந்து வைத்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொது மக்களுக்கு உயர்தரமான சுகாதாரமான வாழ்க்கை சூழலை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதற்காகவும், மாணவர்களுக்கு எளிதில் கல்வி சென்றடையும் வகையிலும், தமிழ்நாடு அரசினால் அவ்வப்போது அறிமுகப்படுத்தும் திட்டங்களின் பயன்கள் விரைந்து பொதுமக்களை சென்றிட வேண்டும் என்பதற்காகவும் ஏராளமான உட்கட்டமைப்பு திட்டங்களை ஏற்படுத்தியும் மறுசீரமைப்பு மேற்கொள்ளவும் உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் வாயிலாக 45 வயதுக்கு மேற்பட்ட இரத்த அழுத்தம், நீரிழிவு நோயாளிகளின் வீடுகளுக்குத் நேரில் சென்று சிகிச்சை அளிக்கும் மக்களை தேடி மருத்துவம் திட்டம், கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேரம் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் நல்லூர் ஊராட்சியில் 15ஆவது மானிய நிதியின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது சுகாதார நிலையம் விரைவில் கட்டிமுடிக்கப் பெற்று இன்றைய தினம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்துவைக்கப்ப ட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 68 கல்லூரி மற்றும் பள்ளி விடுதிகள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இதில் 57 பள்ளி விடுதிகளும், 11 கல்லூரி விடுதிகளும் அடங்கும். திட்டக்குடி வட்டத்தில் 5 பள்ளி விடுதிகளும் செயல்பட்டு வந்தன.

மேலும், திட்டக்குடி பகுதியில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவியர்களின் நலன் கருதி மாணவிகள் தங்கி பயிலும் வசதிகளுடன் இன்றைய தினம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், இவ்விடுதியில் மாணவியர்களின் பாதுகாப்பு வசதி கருதி கண்காணிப்பு கருவிகள், கல்வி கற்பதற்கு ஏதுவாக கணினியுடன் கூடிய செம்மொழி நூலகம் உள்ளிட்ட சிறப்பம்சங்களுடனும் உள்ளது. இவ்விடுதியினை சிறப்பாக பயன்படுத்தி கொண்டு மாணவிகள் வாழ்வில் மென்மேலும் உயர வேண்டும் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா. சரண்யா, துணை இயக்குனர் சுகாதார பணிகள் மரு.பொற்கொடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருமருகல் கடைத் தெருவில் உள்ள நெட் செட்ரில் யூ. ஜி.சி. கொண்டு வந்து இருக்கின்ற அந்த புதிய நெரிமுறைகளை திரும்ப பெற வழியுறுத்தி மாணவர்களின் உரிமையை பறிக்கும் ஒன்றிய அரசை கண்டித்து மாணவர்கள் திரும்ப பெறுக, திரும்ப பெறுக, பரிக்காதே, பரிக்காதே பல்கலைகழக உரிமையை பரிக்காதே என்று மாணவர்கள் வாசகங்களை யூ.ஜி. சி. செயலாளருக்கு, ரெகுலேசன் கமிட்டிக்கு மின் அஞ்சல் அனுப்பி வைத்ததை உயர்கல்வி அமைச்சர் கோவி.செழியன் பார்வையிட்டா. உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர்கள் என்.கௌதமன், நாகை சட்ட மன்ற உறுப்பினர் முகமதுஷநவாஸ், திருமகல் வடக்கு ஒன்றியச் செயலாளர் செல்வ. செங்குட்டுவன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, அ.பாரிபாலன், பெ. முருகானந்தம், ஆர்.துரைராஜ், கேஸ்.வி.செந்தில் மற்றும் பலர் உள்ளனர்